**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 259/2022**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமது இஸ்மாயில் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சாகுல் ஹமீது | தொழில் | : | இல்லை |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 71 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 25.02.2026.

**(1, 3, 4 சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்படவில்லை. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் வேலை எதுவும் செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் அத்தாட்சிகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 08.10.2017 ம் தேதி, எதிரி பால்தினகரன் என்பவரை 06.40 மணிக்கு என் முன்பும், முகமது அலி ஷெரிப் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 08.10.2017 ம் தேதி, எதிரி சேகர் என்பவரை காவல்நிலையத்தில் வைத்து என் முன்பும், முகமது அலி ஷெரிப் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் 08.10.2017 ம் தேதி 13.00 மணிக்கு இலஞ்சி ஜீப்பிலி தெருவில் உள்ள சேகர் வீட்டின் அருகில் வைத்து போலீசார் மங்கி குல்லா, மிளகாய்பொடி, கை உறைகள், சிறிய அரிவாள், பாறைக்கம்பி ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல.

08.10.2017 ம் தேதி, 11.30 மணிக்கு ஊர்மேலழகியான் முப்புடாதியம்மன்கோவில் தெருவிலுள்ள எதிரி பால்தினகரன் வீட்டின் அருகில் வைத்து செல்போனை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், முகமது அலி ஷெரிப் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.25 18:18:24 +0530